

“ஆகையால் நீங்கள் போய்
எல்லா மக்களினத்தாரையும்
சீடராக்குங்கள்.”

— மத்தேயு 28:19



# மறைப்பணி செபமாலை

புதிய நற்செய்திப்பணிக்காக

திருஅவையின் பயன்பாட்டிற்கு மட்டும்



ஆப்பிரிக்கா | அமெரிக்கக் கண்டங்கள் | ஐரோப்பா | ஓசியானியா | ஆசியா

செபிப்போம் • சாட்சியம் பகர்வோம் • நற்செய்தியை அரறிவிப்போம்

# உலக மறைப்பணி செபமாலையின் அறிமுகம்

வணக்கத்திற்குரிய பேராயர் ஃபுல்டன் ஷீன் அவர்கள், 1951ஆம் ஆண்டு உலக மறைப்பணி செபமாலையை அறிமுகப்படுத்தினார். உலகம் முழுவதற்காகக் கத்தோலிக்கர்கள் செபிக்கவும், உலகின் பல்வேறு பகுதிகளில் திருஅவை மேற்கொண்டு வரும் மறைப்பணியைப் பற்றி அறிந்துகொள்ளவும் அவர் ஊக்குவிக்க விரும்பினார்.

செபத்திற்கு மிகுந்த வல்லமை உண்டு என்றும், நாம் செபமாலை செபிக்கும்போது, இதுவரை நாம் சந்தித்திராத மக்களையும் சேர்த்து, உலகெங்கிலும் வாழும் அனைவரையும் நமது செபத்தால் சென்றடைய முடியும் என்றும் அவர் நம்பினார்.

"செபமாலையை முழுமையாகச் செபித்து முடிக்கும்போது, அனைத்துக் கண்டங்களையும், அனைத்து மக்களையும் நமது செபத்தால் அரவணைக்கிறோம்," என்று அவர் கூறினார்.

செபமாலையின் ஒவ்வொரு பத்துமணியும் வெவ்வேறு நிறத்தில் அமைந்துள்ளது. ஒவ்வொரு நிறமும் மறைப்பணியாளர்கள் பணியாற்றும் உலகின் ஒரு பகுதியைக் குறிக்கிறது.

- ஆப்பிரிக்கா – **பச்சை** : அங்குள்ள காடுகளையும் புல்வெளிகளையும் குறிக்கும் வகையில் பச்சை நிறம் பயன்படுத்தப்படுகிறது.
- அமெரிக்கக் கண்டங்கள் – **சிவப்பு**: அங்குள்ள மறைப்பணியாளர்களின் நம்பிக்கையின் தீயைக் குறிக்கும் வகையில் சிவப்பு நிறம் பயன்படுத்தப்படுகிறது.
- ஐரோப்பா – **வெள்ளை** : வெள்ளை ஆடை அணியும் திருத்தந்தையின் இருப்பிடமாக இருப்பதால், ஐரோப்பா வெள்ளை நிறத்தால் குறிக்கப்படுகிறது.
- ஓசியானியா – **நீலம்** : அங்குள்ள தீவுகளைச் சூழ்ந்திருக்கும் பெருங்கடல்களைக் குறிக்கும் வகையில் நீல நிறம் பயன்படுத்தப்படுகிறது.
- ஆசியா – மஞ்சள் : கிழக்கில் உதிக்கும் சூரியனைக் குறிக்கும் அடையாளமாக ஆசியா மஞ்சள் நிறத்தால் குறிக்கப்படுகிறது.

# பேராயரின் செய்தி

கிறிஸ்துவில் அன்பிற்குரிய சகோதர சகோதரிகளே,

நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில், அருளும் சமாதானமும் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் மாதத்தில், உலகெங்கும் உள்ள திருஅவை உலக மறைப்பணி மாதத்தைக் கொண்டாடுகிறது. நற்செய்தியை அறிவிக்கும் மறைப்பணி, திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் உரியது என்பதை இம்மாதம் நமக்கு நினைவூட்டுகிறது. செபம், தியாகம், நம் வாழ்வின் சான்று மற்றும் திருஅவையின் மறைப்பணிகளுக்கான தாராளமான ஆதரவு ஆகியவற்றின் வழியாக, நற்செய்தியை அனைத்து மக்களிடமும் கொண்டு செல்லும் கிறிஸ்துவின் மறைப்பணியில் நாமும் பங்கேற்கிறோம்.

ஆப்பிரிக்கா, அமெரிக்கக் கண்டங்கள், ஐரோப்பா, ஓசியானியா மற்றும் ஆசியா ஆகிய கண்டங்களின் மக்களுக்காகச் செபிப்பதில், உலக மறைப்பணி செபமாலை நீண்ட காலமாக கத்தோலிக்கர்களை ஒன்றிணைத்து வருகிறது. இதன் வழியாக, உலகளாவிய திருஅவையோடு நமது ஒன்றிப்பையும், உலகெங்கும் நற்செய்தி பரவ வேண்டும் என்ற நமது அக்கறையையும் வெளிப்படுத்துகிறோம்.

புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலை, நமது மாமறைமாவட்டத்தின் சூழலுக்கு ஏற்றவாறு வடிவமைக்கப்பட்டுள்ளது. உலக மறைப்பணி செபமாலையின் பாரம்பரிய நோக்கங்களைப் பேணிக் காப்பதோடு, நமது குடும்பங்கள், அடிப்படை கிறிஸ்தவ சமூகங்கள் (BECs), பங்குகள் மற்றும் மாமறைமாவட்டத்தில் நமக்குள்ள மறைப்பணி அழைப்பைப் பற்றிச் சிந்திக்கவும் இது நம்மை அழைக்கிறது. மறைப்பணி என்பது இயேசு கிறிஸ்துவைத் தனிப்பட்ட முறையில் சந்திப்பதில் தொடங்கி, நற்செய்திப்பணியின் வழியாக வளர்ந்து, பரிவோடு உடனிருந்து பயணிப்பதில் வாழ்வாக்கப்பட்டு, மகிழ்ச்சியோடும், ஒன்றாகப் பயணிக்கும் உணர்வோடும், மறைப்பணி ஆர்வத்தோடும் விளங்கும் திருஅவையாகக் கனிதருகிறது என்பதை இது நமக்கு நினைவூட்டுகிறது. ...

ஒவ்வொரு குடும்பமும், அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களும் (BECs), பங்குச் சமூகங்களும் அக்டோபர் மாதம் முழுவதும் புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலையைச் செபிக்குமாறு ஊக்குவிக்கிறேன். மறைப்பணிகளுக்காகச் செபிப்பதோடு மட்டும் நின்றுவிடாமல், இறைவன் நம்மை எங்கு நிலைநிறுத்தியுள்ளாரோ அங்கெல்லாம் மறைப்பணி சீடர்களாக வாழவும் இது நம்மைத் தூண்டுவதாக.

ஒவ்வொரு மறையுண்மையின் இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள மறைப்பணி சிந்தனைக் கேள்விகள், தனிப்பட்ட செபத்திற்கும் சமூகப் பகிர்விற்கும் எளிய வழிகாட்டியாக வழங்கப்பட்டுள்ளன. தூய ஆவியாரின் குரலுக்குச் செவிமடுக்கவும், நற்செய்திப்பணிக்கான நமது அர்ப்பணிப்பை ஆழப்படுத்தவும், நமது அன்றாட வாழ்வில் கிறிஸ்துவை அறிவிக்க நாம் ஒவ்வொருவரும் எவ்வாறு அழைக்கப்பட்டுள்ளோம் என்பதைப் பகுத்துணரவும் அவை நமக்கு உதவுவதாக.

உலக மறைப்பணி மாதத்தைக் கொண்டாடும் இவ்வேளையில், நமது செபங்கள், வாழ்வின் சான்றும் மறைப்பணி ஞாயிறு நிதிக்கான தாராளமான பங்களிப்பின் வழியாகவும், உலகளாவிய திருஅவையோடு நமது ஒன்றிப்பை வெளிப்படுத்துவோம். இதன் மூலம், கிறிஸ்து இன்னும் அதிகம் அறியப்படாத இடங்களில் திருஅவையின் மறைப்பணிகள் தொடர்ந்து நடைபெற நாம் துணைபுரிகிறோம்.

திருஅவையின் அன்னையும் புதிய நற்செய்திப்பணியின் விண்மீனுமாகிய மரியாவின் பரிந்துரையின் வழியாக, தூய ஆவியார் நமது உள்ளங்களைப் புதுப்பித்து, மகிழ்ச்சியுடன் கிறிஸ்துவை அறிவிக்க நம்மைப் பலப்படுத்துவாராக. இதனால், நமது குடும்பங்களும், சமூகங்களும், திருஅவையும் நற்செய்திக்குச் சான்று பகரும் உண்மையுள்ள சாட்சிகளாக மென்மேலும் வளர்வதாக.

“இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்.” (லூக்கா 1:48)

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

**மேன்மைதங்கிய ஜூலியன் லியோ பெங் கிம்**

**கோலாலம்பூர் பேராயர்**

**உலக மறைப்பணி மாதம் 2026**

# புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலை மின்னூல் கையேட்டைப் பயன்படுத்தும் முறை.

## 1. செபமாலையின் மறையுண்மைகள்

செபிக்கும் நாளுக்கோ நிகழ்வுக்கோ ஏற்ற மறையுண்மைகளைத் தேர்ந்தெடுத்துச் செபிக்கலாம்:

- மகிழ்ச்சியின் மறையுண்மைகள் – பக்கம் 6
- ஒளியின் மறையுண்மைகள் – பக்கம் 18
- துயர் மறையுண்மைகள் – பக்கம் 30
- மகிமையின் மறையுண்மைகள் – பக்கம் 42

## 2. இயேசுவின் வாழ்க்கைப் பயணமும் நமது சீடத்துவப் பயணமும்

செபமாலையின் நான்கு தொகுப்பு மறையுண்மைகளும் இயேசுவின் வாழ்க்கையின் வெவ்வேறு காலக்கட்டங்களை நம் கண்முன் கொண்டுவருகின்றன. அவை நமது சீடத்துவப் பயணத்தின் வெவ்வேறு நிலைகளோடும் இணைந்து செல்கின்றன. இந்த நான்கு தொகுப்பு மறையுண்மைகள் வழியாக நாம் பின்வருவனவற்றைத் தியானிக்க அழைக்கப்படுகிறோம்:

- **இயேசுவின் பிறப்பும் இளமைப் பருவமும் –** இயேசுவின் பிறப்பையும் அவரது தொடக்ககால வாழ்வையும் தியானிக்கிறோம். இது நமது குடும்பங்களில் விசுவாசத்தை வளர்த்து, பேணிக் காப்பதன் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது.
- **பணிவாழ்வும் மறைப்பணியு**ம் – இயேசுவின் பொதுவாழ்வையும் மறைப்பணியையும் தியானிக்கிறோம். இது இயேசுவை நமது தனிப்பட்ட ஆண்டவராகவும் மீட்பராகவும் சந்தித்து, அவரோடு ஆழமான உறவை வளர்த்துக்கொள்ள நம்மை அழைக்கிறது.
- **இயேசுவின் பாடுகளும் இறப்பும்** – இயேசுவின் பாடுகளையும் சிலுவை மரணத்தையும் தியானிக்கிறோம். இது நமது பாவங்களுக்கான மன்னிப்பைப் பெற்று, இறைவனோடு ஒப்புரவாக வாழ நம்மை அழைக்கிறது.

- **இயேசுவின் உயிர்ப்பு** – இயேசுவின் உயிர்ப்பைத் தியானிக்கிறோம். இது புதிய வாழ்விலும் நிலைவாழ்விலும் நாம் கொண்டிருக்கும் நம்பிக்கையை உறுதிப்படுத்துகிறது.

3. **புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலையைச் செபிக்கும் முறை**

வழக்கமாக நாம் பயன்படுத்தும் செபமாலை மணிகளைக் கொண்டு இந்த மறைப்பணி செபமாலையைச் செபிக்கலாம். முதலில் “திருஅவையின் அன்னையும் நற்செய்திப்பணியின் விண்மீனுமான மரியா” செபத்தைச் செபித்து, அதனைத் தொடர்ந்து “விசுவாச அறிக்கை” செபத்தைச் சொல்லவும்.

ஒவ்வொரு பத்து மணிக்கும், புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலை மின்னூல் கையேட்டில் இரண்டு வகையான மறைப்பணி கருத்துகள் வழங்கப்பட்டுள்ளன:

**உலகளாவிய மறைப்பணி கருத்துகள்** – ஒவ்வொரு பத்து மணிக்கும் குறிக்கப்பட்டுள்ள கண்டத்தின் மக்களுக்காகவும், அங்கு நடைபெறும் திருஅவையின் மறைப்பணிக்காகவும் செபிப்போம்.

**நமது நாட்டிற்கான மறைப்பணி கருத்துகள்** – மலேசியத் திருஅவையின் தேவைகளுக்காகவும், நமது நாட்டில் நடைபெறும் மறைப்பணிக்காகவும் செபிப்போம்.

4. **மறைப்பணி சிந்தனைக்கான கேள்விகளும் உறுதிமொழி செபமும்**

“வாழ்க அரசியே! (கிருபை தயாபத்து)” மற்றும் “செபிப்போமாக” செபங்களுக்குப் பிறகு, சிறு குழுக்களில் கலந்துரையாடவும் பகிர்ந்துகொள்ளவும் சில சிந்தனைக் கேள்விகள் வழங்கப்பட்டுள்ளன.

இக்கேள்விகள் மறைப்பணி மற்றும் நற்செய்திப்பணி குறித்த நமது ஆர்வத்தையும் பொறுப்புணர்வையும் மேலும் ஆழப்படுத்த உதவுகின்றன. இங்கு கொடுக்கப்பட்டுள்ள கேள்விகள் மட்டுமே இறுதியானவை அல்ல; தேவைக்கும் சூழலுக்கும் ஏற்ப வேறு பொருத்தமான கேள்விகளையும் சேர்த்துக்கொள்ளலாம்.

கலந்துரையாடலும் பகிர்வும் நிறைவடைந்ததும், மறைப்பணி மற்றும் நற்செய்திப்பணியில் ஈடுபடுவதற்கான ஓர் உறுதிப்பாட்டை மேற்கொள்ள அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்

## 5. பாடல்கள்

புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலை மின்னூல் கையேட்டில் குறிப்பிட்ட பாடல்கள் எதுவும் பரிந்துரைக்கப்படவில்லை. எனவே, குடும்பங்கள், அடிப்படை கிறிஸ்தவச் சமூகங்கள் (BECs) மற்றும் பங்குச் சமூகங்கள் தங்களது சூழலுக்கு ஏற்ற பாடல்களைத் தேர்ந்தெடுத்துப் பாடலாம்.

செபமாலையை அன்னை மரியா பாடலுடன் தொடங்கி, பொருத்தமான மறைப்பணி அல்லது முடிவுப் பாடலுடன் நிறைவு செய்யலாம்.

## 6. கூடுதல் செபங்கள்

தனிப்பட்ட தேவைகளுக்கும், குடும்பங்கள், அடிப்படை கிறிஸ்தவச் சமூகங்கள் (BECs) மற்றும் பங்குச் சமூகங்களின் தேவைகளுக்கும் ஏற்ப, பொருத்தமான பிற செபங்களையும் சேர்த்துச் செபிக்கலாம்.

- இயேசுவின் திரு இருதய மன்றாட்டு மாலை அல்லது அன்னை மரியாவின் மன்றாட்டு மாலை
- புனித மிக்கேல் அதிதூதரிடம் மன்றாடும் செபம் அல்லது பிற புனிதர்களிடம் மன்றாடும் செபங்கள்
- பிற பக்தி முயற்சி செபங்கள் அல்லது மறைப்பணி சார்ந்த செபங்கள்


மகிழ்ச்சியின்
மறையுண்மைகள்
திங்கள் மற்றும் சனிக்கிழமைகளில்
மறைப்பணி குடும்பத்திலிருந்து
தொடங்குகிறது
குடும்பங்கள், புதிய வாழ்வு மற்றும்
புதிய நற்செய்திப்பணி
ஆப்பிரிக்கா
அமெரிக்கக்
கண்டங்கள்
ஐரோப்பா
ஓசியானியா
ஆசியா
செபிப்போம்
சாட்சியம் பகர்வோம்
நற்செய்தியை அறிவிப்போம்

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.

## திருஅவையின் அன்னையும் நற்செய்திப்பணியின் விண்மீனுமாகிய மரியாவை நோக்கி செபம்

இயேசுவின் அன்னையும், அவரது திருஅவையின் அன்னையுமாகிய மரியே,

பெந்தக்கோஸ்தே நாளில் தூய ஆவியார் திருஅவையைத் தோற்றுவித்து, அதனை மறைப்பணிக்காக அனுப்பியபோது, நீர் திருத்தூதர்களோடு உடனிருந்தீர். உமது திருமகனை இன்னும் அறியாத அனைவரிடமும் நற்செய்தியைக் கொண்டு செல்லும் திருஅவையின் மறைப்பணியை வழிநடத்துவதில், உமது தாய்க்குரிய பங்கை நாங்கள் உணர்கின்றோம். காலந்தோறும் மறைப்பணியாளர்கள் தங்கள் பணியின் கனிகளை உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைத்துள்ளனர். இறை அருளின் அன்னையே, உமது பரிந்துரையால் திருமுழுக்கின் அருள் இறைமக்களின் உள்ளங்களில் வேரூன்றி வளர்ந்தது.

இப்போது, குறிப்பாகப் புதிய நற்செய்திப்பணியின் வழியாக, திருஅவையின் நற்செய்திப்பணியை நிறைவேற்ற எங்களுக்கு உதவியருளும். நற்செய்திப்பணியின் விண்மீனே, எங்களையும், எங்கள் குடும்பங்களையும், எங்கள் அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களையும் (BEC), எங்கள் பங்குகளையும், எங்கள் மாமறைமாவட்டத்தையும், எங்களது மறைப்பணி அழைத்தலையும் உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைக்கின்றோம்.

தூய ஆவியாரின் துணையால், நற்செய்தியை அனைத்து மக்களின் உள்ளங்களிலும் வாழ்விலும் இன்னும் ஆழமாகக் கொண்டு செல்ல எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். மறைப்பணி சீடர்களை உருவாக்கி, சொல்லாலும் வாழ்வாலும் உமது திருமகனுக்குச் சான்று பகர்ந்து, ஒருங்கிணைந்து பயணிக்கும் மறைப்பணி திருஅவையாக நாங்கள் திகழ அருள்புரியும்.

உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தந்தையோடும் தூய ஆவியாரோடும் ஒன்றிப்பில், என்றென்றும் புகழும் நன்றியும் உரித்தாகுக.

ஆமென்.

## திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன்.

அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகிறேன். இவர் தூய ஆவியால் கருவாகி, கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்திய பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.

தூய ஆவியாரை நம்புகிறேன். புனித கத்தோலிக்கத் திருஅவையை, புனிதர்களின் உறவு ஒன்றிப்பை, பாவ மன்னிப்பை, உடலின் உயிர்ப்பை, நிலைவாழ்வை நம்புகிறேன். ஆமென்.

## கர்த்தர் கற்பித்த செபம்

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக. உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை செபம்(3 முறை)

அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசிபெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசிபெற்றவரே.

புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

## தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

# முதலாம் மகிழ்ச்சியின் மறையுண்மை

## 🟢 பச்சை – ஆப்பிரிக்கா

## மங்கள வார்த்தை அறிவிப்பு

மரியா நற்செய்தியைப் பெற்றுக்கொண்டு, இறைவன் மீது நம்பிக்கை வைத்து “ஆம்” என்று பதிலளிக்கிறார். அவரது நம்பிக்கை முதன்முதலில் கனிதரத் தொடங்கும் இடம் குடும்பமே.

## குடும்பமே முதல் மறைப்பணித் தளம்

ஆப்பிரிக்க மக்களுக்காகச் செபிப்போம். அமைதி, ஒப்புரவு மற்றும் நம்பிக்கையின் வழியாக நற்செய்தி தொடர்ந்து நிறைவான கனிகளைத் தருவதாக.




நமது குடும்பங்களுக்காகவும் செபிப்போம். அவை நம்பிக்கை வளர்க்கப்படும் இல்லத் திருஅவைகளாக விளங்குவதாக. குழந்தைகள் இறைவனின் விலைமதிப்பற்ற கொடையாக வரவேற்கப்படவும், அன்பு, செபம் மற்றும் கனிவின் வழியாக கிறிஸ்துவைச் சந்திக்கவும் நமது குடும்பங்கள் வழிவகுப்பதாக.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# இரண்டாம் மகிழ்ச்சியின் மறையுண்மை

## 🔴 சிவப்பு – அமெரிக்கக் கண்டங்கள்

## மரியா எலிசபெத்தைச் சந்தித்தல்

மரியா தம் திருவயிற்றில் இயேசுவைச் சுமந்தவாறு எலிசபெத்தைச் சந்திக்கச் செல்கிறார். மரியாவுக்கும் எலிசபெத்துக்கும் இடையிலான இந்தச் சந்திப்பு, ஒரு தலைமுறையிலிருந்து அடுத்த தலைமுறைக்கு நம்பிக்கை பகிரப்படுவதையும், திருஅவையின் மறைப்பணியில் இளையோருக்கு முக்கிய இடம் உண்டு என்பதையும் நினைவூட்டுகிறது.

## இளையோரும் திருஅவையின் எதிர்காலமும்

அமெரிக்கக் கண்டங்களின் மக்களுக்காகச் செபிப்போம்; அவர்கள் மறைப்பணி ஆர்வத்துடன் கிறிஸ்துவைத் தொடர்ந்து அறிவிக்க மன்றாடுவோம்.




நமது குழந்தைகள், இளைஞர்கள் மற்றும் இளம் வயதினருக்காகவும் செபிப்போம்; அவர்கள் இயேசுவைத் தனிப்பட்ட முறையில் சந்திக்கவும், தங்களது இறை அழைப்பைக் கண்டறியவும், திருஅவைக்கும் உலகிற்கும் நம்பிக்கையைக் கொண்டு செல்லும் துணிவுமிக்க மறைப்பணி சீடர்களாக உருவாகவும் மன்றாடுவோம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# மூன்றாம் மகிழ்ச்சியின் மறையுண்மை

## ⚪ வெள்ளை – ஐரோப்பா

## இயேசுவின் பிறப்பு

இயேசு ஓர் எளிய குடும்பத்தில் பிறந்து, எளிய மக்களால் வரவேற்கப்படுகிறார். உறவுகள் மற்றும் சந்திப்புகளின் வழியாக நற்செய்தி பரவுகிறது.

## அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களும் (BECs) பங்குச் சமூகங்களும்

ஐரோப்பாவில் உள்ள திருஅவைக்காகச் செபிப்போம்; அது விசுவாசத்திலும் மறைப்பணி சான்று பகர்வதிலும் புதுப்பிக்கப்பட மன்றாடுவோம்.




நமது அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களுக்காகவும் (BECs), பங்குச் சமூகங்களுக்காகவும் செபிப்போம்; அவை அனைவரையும் வரவேற்று, ஒன்றிப்பு, பங்கேற்பு மற்றும் மறைப்பணி உணர்வுடன் செயல்படும் சமூகங்களாகத் திகழவும், கிறிஸ்துவிடமிருந்தும் அவரது திருஅவையிடமிருந்தும் விலகிச் சென்றவர்களைப் புதிய நற்செய்திப்பணியின் வழியாக சென்றடையவும் மன்றாடுவோம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# நான்காம் மகிழ்ச்சியின் மறையுண்மை

## ● நீலம் – ஓசியானியா

### இயேசுவைக் கோவிலில் காணிக்கையாக அர்ப்பணித்தல்

சிமியோனும் அன்னாவும் இயேசுவை அடையாளம் கண்டு, தாங்கள் கண்டதை அறிவிக்கின்றனர். அவர்களது முதுமை, அவர்களின் மறைப்பணி அழைப்பைக் குறைத்துவிடவில்லை. மாறாக, அவர்களது வாழ்க்கை அனுபவம் சமூகத்திற்குக் கிடைத்த ஒரு கொடையாக மாறியுள்ளது.

## முதியோரின் ஞானமும் தலைமுறைகளின் கொடையும்

ஓசியானியா மக்களுக்காகச் செபிப்போம்; பல்வேறு கலாச்சாரங்களையும் தீவுகளையும் கொண்ட அவர்கள், ஒன்றிப்புடன் வாழ்ந்து, விசுவாசத்தில் வலுப்பெற்று, செப வாழ்வில் தொடர்ந்து வளர மன்றாடுவோம்.




நமது முதியோருக்காகவும் செபிப்போம்; அவர்கள் உரிய கண்ணியத்துடனும் அன்புடனும் பேணப்படவும், விசுவாசத்தில் வலுப்பெறவும், தங்கள் வாழ்வின் ஞானத்தைத் தொடர்ந்து பகிர்ந்து, இளைய தலைமுறையினருக்கு நல்வழிகாட்டும் சாட்சிகளாகத் திகழவும் மன்றாடுவோம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# ஐந்தாம் மகிழ்ச்சியின் மறையுண்மை

## ● மஞ்சள் – ஆசியா

### இயேசுவைக் கோவிலில் கண்டடைதல்

மரியாவும் யோசேப்பும் இயேசுவைத் தேடி, இறுதியில் அவரைக் கோவிலில் கண்டடைகின்றனர். இன்று, எண்ணிம (டிஜிட்டல்) ஊடகங்களின் தாக்கம் அதிகரித்து வரும் உலகில், குடும்பங்கள் உண்மையை அறிந்துகொள்ளவும், வாழ்வின் உண்மையான பொருளைக் கண்டறியவும், இறைவனைத் தேடிக் கண்டடையவும் முயல்கின்றன.

## குடும்பங்களும் எண்ணிம (டிஜிட்டல்) நற்செய்திப்பணியும்

பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் சமயங்களுக்கு மத்தியில் கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் ஆசிய மக்களுக்காகச் செபிப்போம்.




உலகெங்கிலும் உள்ள நமது குடும்பங்களுக்காகவும் பங்குகளுக்காகவும் செபிப்போம்; அவர்கள் எண்ணிம (டிஜிட்டல்) நற்செய்திப்பணியை விவேகத்துடன் ஏற்றுக்கொண்டு, நவீன தகவல் தொடர்பு வழிமுறைகளைப் பயன்படுத்தி, உண்மையுடனும் பரிவுடனும் பொறுப்புணர்வுடனும் நற்செய்தியை அறிவிக்க மன்றாடுவோம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# வாழ்க அரசியே! (கிருபை தயாபத்து) செபம்

வாழ்க அரசியே, தயை மிகுந்த அன்னையே,
எங்கள் வாழ்வே, இனிமையே, அடைக்கலமே வாழ்க!
தாயகம் இழந்த ஏவாளின் மக்கள் நாங்கள்,
தாயே என்று உம்மைக் கூவி அழைக்கிறோம்.
கண்ணீரின் பள்ளத்தாக்கிலிருந்து உம்மை நோக்கிக்
கதறி அழுது, பெருமூச்சு விடுகிறோம்.
ஆதலால் எங்களுக்காகப் பரிந்துரைக்கும் தாயே,
அன்புடன் எம்மைக் கடைக்கண் பாரும்.
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவை,
எங்கள் இம்மை வாழ்வின் இறுதியில் காணச் செய்யும்.
கருணையின் உருவே!
தாய்மையின் கனிவே!
இனிய கன்னித் தாயே!

**கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படி.**

இறைவனின் புனித அன்னையே, எங்களுக்காக
வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

இறைவா, உமது ஒரே திருமகன் தமது வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் வழியாக எங்களுக்கு நிலையான மீட்பின் பலனைப் பெற்றுத் தந்தார். புனித கன்னி மரியாவின் தூய செபமாலையின் இம்மறையுண்மைகளைத் தியானிக்கும் நாங்கள், அவற்றில் அடங்கியுள்ளவற்றைப் பின்பற்றி வாழவும், அவை வாக்களிப்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக.
**ஆமென்.**

# மறைப்பணி சிந்தனைக்கான கேள்விகள்

கிறிஸ்துவின் தொடக்ககால வாழ்வைச் சிந்திக்கும்போது, நற்செய்திப்பணி நமது அன்றாட வாழ்விலிருந்தே தொடங்குகிறது என்பதை உணர்கிறோம். நமது இல்லங்கள், குடும்பங்கள், உறவுகள் மற்றும் சமூகங்கள் அனைத்துமே நமது மறைப்பணியின் தொடக்கத் தளங்களாக அமைகின்றன.

கடவுளின் அழைப்புக்கு மரியா கூறிய “ஆம்” , அவரது வாழ்வையே ஒரு மறைப்பணியாக மாற்றியது. இன்று புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலையை நிறைவு செய்யும் இவ்வேளையில், நாம் சிந்தித்துக் கேட்டுக்கொள்ள வேண்டியவை:

❖ கிறிஸ்துவின் மீதான என் விசுவாசத்தையும், அவரோடு கொண்டுள்ள உறவையும் புதுப்பித்துக்கொள்ள, என் வாழ்வில் எத்தகைய மாற்றத்திற்கு அவர் என்னை அழைக்கிறார்?

❖ செபம், அன்பு, விசுவாசம் நிறைந்த ஓர் இல்லத் திருஅவையாக என் குடும்பம் வளர நான் என்ன செய்யலாம்?

❖ எனது BEC அல்லது பங்கில், ஊக்கமளிக்கும் வார்த்தையோ, மீண்டும் திருஅவையோடு இணைய அன்பான அழைப்போ தேவைப்படும் ஒருவர் இருக்கிறாரா?

❖ இளைய தலைமுறையினர் இயேசுவைத் தங்கள் வாழ்வில் ஆழமாக உணர்ந்து சந்திக்க நான் எவ்வாறு துணைநிற்க முடியும்?

❖ விசுவாசத்தைப் பகிரவும், சமூக உறவை வளர்க்கவும், பிறருக்கு நம்பிக்கையூட்டவும் சமூக ஊடகங்களை நாம் எவ்வாறு நல்ல முறையில் பயன்படுத்தலாம்?

# உறுதிமொழி செபம்

அன்புத் தந்தையே,

உமது திருமகனை எங்களுக்குத் தந்ததற்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். இந்த மகிழ்ச்சி மறையுண்மைகளைச் சிந்தித்துச் செபித்தபோது, உமது அன்பை இன்னும் ஆழமாக உணர்ந்தோம்.

உமது அரசு எங்களிடையே மலர, எங்களால் இயன்றதை மனமுவந்து செய்ய எங்களுக்கு உதவியருளும். நாங்கள் பெற்ற இந்த மகிழ்ச்சியைப் பிறரோடு பகிர்ந்துகொள்ளும் அருளை எங்களுக்குத் தந்தருளும்.

திருமுழுக்குப் பெற்று அனுப்பப்பட்டவர்களாக, தேவையில் இருப்போருக்கு உதவ எங்கள் கைகள் தயாராக இருக்கட்டும்; உமது வழியில் நடக்க எங்கள் கால்கள் தயாராக இருக்கட்டும்; உமது அன்பை எடுத்துரைக்க எங்கள் வார்த்தைகள் துணைபுரியட்டும்.

ஆமென்.

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே.
ஆமென்.

“இதோ நானிருக்கிறேன்.
அடியேனை அனுப்பும்.”

– எசாயா 6:8


ஒளியின் மறையுண்மைகள்
வியாழக்கிழமைகளில்
நற்செய்தி அறிவிப்புப் பணி
கிறிஸ்துவோடு ஒன்றித்து,
நற்செய்தியைப் பறைசாற்றுதல்
ஆப்பிரிக்கா
அமெரிக்கக் கண்டங்கள்
ஐரோப்பா
ஓசியானியா
ஆசியா
செபிப்போம் • சான்று பகர்வோம் • நற்செய்தியைப் பறைசாற்றுவோம்

**தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.**

## திருஅவையின் அன்னையும் நற்செய்திப்பணியின் விண்மீனுமாகிய மரியாவை நோக்கி செபம்

இயேசுவின் அன்னையும், அவரது திருஅவையின் அன்னையுமாகிய மரியே,

பெந்தக்கோஸ்தே நாளில் தூய ஆவியார் திருஅவையைத் தோற்றுவித்து, அதனை மறைப்பணிக்காக அனுப்பியபோது, நீர் திருத்தூதர்களோடு உடனிருந்தீர். உமது திருமகனை இன்னும் அறியாத அனைவரிடமும் நற்செய்தியைக் கொண்டு செல்லும் திருஅவையின் மறைப்பணியை வழிநடத்துவதில், உமது தாய்க்குரிய பங்கை நாங்கள் உணர்கின்றோம். காலந்தோறும் மறைப்பணியாளர்கள் தங்கள் பணியின் கனிகளை உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைத்துள்ளனர். இறை அருளின் அன்னையே, உமது பரிந்துரையால் திருமுழுக்கின் அருள் இறைமக்களின் உள்ளங்களில் வேரூன்றி வளர்ந்தது.

இப்போது, குறிப்பாகப் புதிய நற்செய்திப்பணியின் வழியாக, திருஅவையின் நற்செய்திப்பணியை நிறைவேற்ற எங்களுக்கு உதவியருளும். நற்செய்திப்பணியின் விண்மீனே, எங்களையும், எங்கள் குடும்பங்களையும், எங்கள் அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களையும் (BEC), எங்கள் பங்குகளையும், எங்கள் மாமறைமாவட்டத்தையும், எங்களது மறைப்பணி அழைத்தலையும் உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைக்கின்றோம்.

தூய ஆவியாரின் துணையால், நற்செய்தியை அனைத்து மக்களின் உள்ளங்களிலும் வாழ்விலும் இன்னும் ஆழமாகக் கொண்டு செல்ல எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். மறைப்பணி சீடர்களை உருவாக்கி, சொல்லாலும் வாழ்வாலும் உமது திருமகனுக்குச் சான்று பகர்ந்து, ஒருங்கிணைந்து பயணிக்கும் மறைப்பணி திருஅவையாக நாங்கள் திகழ அருள்புரியும்.

உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தந்தையோடும் தூய ஆவியாரோடும் ஒன்றிப்பில், என்றென்றும் புகழும் நன்றியும் உரித்தாகுக.

**ஆமென்.**

## திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன்.

அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகிறேன். இவர் தூய ஆவியால் கருவாகி, கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.

தூய ஆவியாரை நம்புகிறேன். புனித கத்தோலிக்கத் திருஅவையை, புனிதர்களின் உறவு ஒன்றிப்பை, பாவ மன்னிப்பை, உடலின் உயிர்ப்பை, நிலைவாழ்வை நம்புகிறேன். ஆமென்.

## கர்த்தர் கற்பித்த செபம்

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக. உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை செபம்(3 முறை)

அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசிபெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசிபெற்றவரே.

புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

## தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

# முதலாம் ஒளியின் மறையுண்மை

## ● பச்சை – ஆப்பிரிக்கா

## இயேசுவின் திருமுழுக்கு

திருமுழுக்கு மற்றும் அருளடையாளங்கள் வழியாக, கிறிஸ்து தொடர்ந்து நம்மைச் சந்தித்து, மறைப்பணிக்காக நம்மை வலுப்படுத்துகிறார்.

## அருளடையாள வாழ்வின் வழியாக கிறிஸ்துவோடு ஒன்றித்தல்

கிறிஸ்துவின் ஒளி ஆப்பிரிக்க மக்களின் வாழ்வைத் தொடர்ந்து உருமாற்ற வேண்டுமென்று அவர்களுக்காகச் செபிப்போம்.



மேலும், திருமுழுக்கையும் ஏனைய அருளடையாளங்களையும் பெறத் தயாராகும் அனைவருக்காகவும் செபிப்போம். அவர்கள் இயேசு கிறிஸ்துவைத் தங்கள் வாழ்வில் ஆழமாக உணர்ந்து, விசுவாசத்தில் வளர்ந்து, நற்செய்தியின் மகிழ்ச்சியான சாட்சிகளாகத் திகழ வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# இரண்டாம் ஒளியின் மறையுண்மை

## ● சிவப்பு – அமெரிக்கக் கண்டங்கள்

### கானாவூர் திருமண விருந்து

மரியா பணியாளர்களை இயேசுவிடம் அனுப்பி அவர்களிடம்: “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்,” என்றார்.

## மறைக்கல்வியும் விசுவாச உருவாக்கமும்

அமெரிக்கக் கண்டங்களின் மக்கள் மறைப்பணி ஆர்வத்தோடு கிறிஸ்துவுக்குத் தொடர்ந்து சான்று பகர, அவர்களுக்காகச் செபிப்போம்



மேலும், மறைக்கல்வியாளர்கள், ஆசிரியர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் விசுவாச உருவாக்கத்திலும் கத்தோலிக்கக் கல்வியிலும் ஈடுபட்டுள்ள அனைவருக்காகவும் செபிப்போம். அவர்கள் நற்செய்தியின் அழகையும் உண்மையையும் விசுவாசத்தோடு அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துரைத்து, மறைப்பணி சீடர்களை உருவாக்கும் பணியில் சிறந்து விளங்க வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# மூன்றாம் ஒளியின் மறையுண்மை

## ⬤ வெள்ளை – ஐரோப்பா

## இறையாட்சியின் அறிவிப்பு

“மனம் மாறி, நற்செய்தியை நம்புங்கள்” என இயேசு கூறினார்.

## புதிய நற்செய்திப்பணி

ஐரோப்பாவில் உள்ள திருஅவை, கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் வாழ்வில் மென்மேலும் வளர, செபிப்போம்.



மேலும், திருஅவையை விட்டு விலகிச் சென்றவர்களுக்காகவும் செபிப்போம். புதிய நற்செய்திப்பணியின் வழியாக அவர்கள் நற்செய்தியின் மகிழ்ச்சியையும், இறைவனின் இரக்கத்தையும், கிறிஸ்தவ சமூகத்தில் ஒன்றிணைந்து வாழ்வதன் அழகையும் மீண்டும் கண்டுணர வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# நான்காம் ஒளியின் மறையுண்மை

## ● நீலம் – ஓசியானியா

## இயேசுவின் தோற்றமாற்றம்

சீடர்கள் கிறிஸ்துவின் மாட்சியைக் கண்டு, தங்கள் வாழ்வில் மாற்றம் பெற்றார்கள்.

## எண்ணிம (டிஜிட்டல்) மறைப்பணியும் சமூக ஊடகச் சேவையும்

ஓசியானியா கண்டத்தின் மக்கள், நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் தொடர்ந்து வளர வேண்டுமென்று அவர்களுக்காகச் செபிப்போம்.



மேலும், எண்ணிம (டிஜிட்டல்) நற்செய்திப்பணியிலும் சமூக ஊடகச் சேவையிலும் ஈடுபட்டுள்ள அனைவரும், இன்றைய எண்ணிம (டிஜிட்டல்) உலகில் கிறிஸ்துவைப் பறைசாற்ற, தொழில்நுட்பத்தை ஞானத்துடனும் படைப்பாற்றலுடனும் நேர்மையுடனும் பயன்படுத்த வேண்டுமென்று அவர்களுக்காகச் செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# ஐந்தாம் ஒளியின் மறையுண்மை

## ● மஞ்சள் – ஆசியா

## திருநற்கருணையை நிறுவுதல்

திருநற்கருணை, திருஅவையின் வாழ்வின் ஊற்றாகவும் உச்சமாகவும் திகழ்ந்து, பல்வேறு மொழி, கலாச்சாரம், நாடுகளைச் சேர்ந்த மக்களைக் கிறிஸ்துவில் ஒரே உடலாக ஒன்றிணைக்கிறது.

## பல கலாச்சாரச் சமூகத்தில் கிறிஸ்துவுக்குச் சான்று பகர்தல்

உண்மை, அமைதி மற்றும் வாழ்வின் பொருளைத் தேடும் ஆசியக் கண்டத்து மக்களுக்காகச் செபிப்போம்.



மேலும், பல்கலாச்சாரச் சமூகத்தில் வாழும் நாம், பணிவுடனும் துணிவுடனும் கிறிஸ்துவுக்குச் சான்று பகரவும், ஒருவரையொருவர் மதிக்கும் உரையாடல், அன்பான சாட்சிய வாழ்வு மற்றும் மகிழ்ச்சியுடன் கூடிய மறைப்பணி வழியாக அவரைப் பறைசாற்றவும், நமது மறைமாவட்டத் திருஅவைக்காகச் செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# வாழ்க அரசியே! (கிருபை தயாபத்து) செபம்

வாழ்க அரசியே, தயை மிகுந்த அன்னையே,
எங்கள் வாழ்வே, இனிமையே, அடைக்கலமே வாழ்க!
தாயகம் இழந்த ஏவாளின் மக்கள் நாங்கள்,
தாயே என்று உம்மைக் கூவி அழைக்கிறோம்.
கண்ணீரின் பள்ளத்தாக்கிலிருந்து உம்மை நோக்கிக்
கதறி அழுது, பெருமூச்சு விடுகிறோம்.
ஆதலால் எங்களுக்காகப் பரிந்துரைக்கும் தாயே,
அன்புடன் எம்மைக் கடைக்கண் பாரும்.
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவை,
எங்கள் இம்மை வாழ்வின் இறுதியில் காணச் செய்யும்.
கருணையின் உருவே!
தாய்மையின் கனிவே!
இனிய கன்னித் தாயே!

**கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படி.**

இறைவனின் புனித அன்னையே, எங்களுக்காக
வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

இறைவா, உமது ஒரே திருமகன் தமது வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் வழியாக எங்களுக்கு நிலையான மீட்பின் பலனைப் பெற்றுத் தந்தார். புனித கன்னி மரியாவின் தூய செபமாலையின் இம்மறையுண்மைகளைத் தியானிக்கும் நாங்கள், அவற்றில் அடங்கியுள்ளவற்றைப் பின்பற்றி வாழவும், அவை வாக்களிப்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக.
**ஆமென்.**

# மறைப்பணி சிந்தனைக்கான கேள்விகள்

இந்த ஒளியின் மறையுண்மைகளை நிறைவு செய்யும் இவ்வேளையில், உலகின் ஒளியாகிய கிறிஸ்துவைச் சந்திப்பதிலிருந்தே நமது நற்செய்திப்பணி தொடங்குகிறது என்பதை நினைவுகூருகிறோம். கிறிஸ்துவுடனான ஒவ்வொரு சந்திப்பும் மனமாற்றத்திற்கும், சீடத்துவ வாழ்விற்கும், மறைப்பணிக்கும் நம்மை அழைக்கிறது.

இன்று புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலையை நிறைவு செய்யும் இவ்வேளையில், பின்வரும் கேள்விகளை நம் வாழ்வோடு இணைத்துச் சிந்திப்போம்:

❖ என் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்திய இயேசுவுடனான சந்திப்பை நான் கடைசியாக எப்போது அனுபவித்தேன்?

❖ பிறரை அன்புடன் வரவேற்று, அவர்களை அணுகி, நம்பிக்கையில் வளரத் துணைபுரியும் சமூகமாக நாம் எவ்வாறு திகழ முடியும்?

❖ எனக்குக் கிடைத்துள்ள கொடைகள், உறவுகள் மற்றும் எண்ணிம (டிஜிட்டல்) தளங்கள் வழியாக, நற்செய்தியை நான் எவ்வாறு பிறருடன் பகிர்ந்து பறைசாற்ற முடியும்?

❖ அனைவரும் கிறிஸ்துவைச் சந்தித்து, நம்பிக்கையில் வளர்ந்து, மகிழ்ச்சியுடன் நற்செய்தியைப் பறைசாற்ற நமது அடிப்படை கிறிஸ்தவச் சமூகம் (BEC) எவ்வாறு வழிகாட்ட முடியும்?

❖ நம் வாழ்நாள் முழுவதும் நம்பிக்கையில் வளர்ந்து, நம் வாழ்வைப் புதுப்பித்துக்கொள்ள, நமது பங்கு சமூகம் எவ்வாறு துணைபுரிய முடியும்?

# உறுதிமொழி செபம்

உலகின் ஒளியாகிய ஆண்டவர் இயேசுவே,

உம்மைச் சந்தித்து, அந்தச் சந்திப்பின் மகிழ்ச்சியோடு நற்செய்தியைப் பறைசாற்ற எங்களை அழைக்கிறீர். திருமுழுக்கின் அருளை எங்களில் புதுப்பித்து, திருநற்கருணையால் எங்களைப் பேணி, உமது வார்த்தையால் எங்கள் நம்பிக்கையை ஆழப்படுத்தும்.

எங்கள் இல்லங்களிலும், பங்கு சமூகத்திலும், பணியிடங்களிலும், எண்ணிம (டிஜிட்டல்) உலகிலும் நற்செய்தியைப் பறைசாற்ற எங்களுக்குத் துணிவைத் தாரும். பல்கலாச்சாரச் சமூகத்தில் உமது அன்புக்குச் சான்று பகர எங்களை வழிநடத்தும். இதனால் அனைவரும் வழியும் உண்மையும் வாழ்வுமாகிய உம்மை அறிந்துகொள்வார்களாக. ஆமென்.

**தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.**

“நீங்கள் உலகிற்கு ஒளியாய் இருக்கிறீர்கள்.”

– மத்தேயு 5:14


துயர்
மறையுண்மைகள்
செவ்வாய் மற்றும் வெள்ளிக்கிழமைகளில்
இரக்கத்தின் மறைப்பணி
குணப்படுத்துதல் • ஒப்புரவு
• உடனிருந்து பயணித்தல்
ஆப்பிரிக்கா
அமெரிக்கக் கண்டங்கள்
ஐரோப்பா
ஓசியானியா
ஆசியா
செபிப்போம் • சான்று பகர்வோம் • நற்செய்தியை அறிவிப்போம்

தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.

## திருஅவையின் அன்னையும் நற்செய்திப்பணியின் விண்மீனுமாகிய மரியாவை நோக்கி செபம்

இயேசுவின் அன்னையும், அவரது திருஅவையின் அன்னையுமாகிய மரியே,

பெந்தக்கோஸ்தே நாளில் தூய ஆவியார் திருஅவையைத் தோற்றுவித்து, அதனை மறைப்பணிக்காக அனுப்பியபோது, நீர் திருத்தூதர்களோடு உடனிருந்தீர். உமது திருமகனை இன்னும் அறியாத அனைவரிடமும் நற்செய்தியைக் கொண்டு செல்லும் திருஅவையின் மறைப்பணியை வழிநடத்துவதில், உமது தாய்க்குரிய பங்கை நாங்கள் உணர்கின்றோம். காலந்தோறும் மறைப்பணியாளர்கள் தங்கள் பணியின் கனிகளை உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைத்துள்ளனர். இறை அருளின் அன்னையே, உமது பரிந்துரையால் திருமுழுக்கின் அருள் இறைமக்களின் உள்ளங்களில் வேரூன்றி வளர்ந்தது.

இப்போது, குறிப்பாகப் புதிய நற்செய்திப்பணியின் வழியாக, திருஅவையின் நற்செய்திப்பணியை நிறைவேற்ற எங்களுக்கு உதவியருளும். நற்செய்திப்பணியின் விண்மீனே, எங்களையும், எங்கள் குடும்பங்களையும், எங்கள் அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களையும் (BEC), எங்கள் பங்குகளையும், எங்கள் மாமறைமாவட்டத்தையும், எங்களது மறைப்பணி அழைத்தலையும் உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைக்கின்றோம்.

தூய ஆவியாரின் துணையால், நற்செய்தியை அனைத்து மக்களின் உள்ளங்களிலும் வாழ்விலும் இன்னும் ஆழமாகக் கொண்டு செல்ல எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். மறைப்பணி சீடர்களை உருவாக்கி, சொல்லாலும் வாழ்வாலும் உமது திருமகனுக்குச் சான்று பகர்ந்து, ஒருங்கிணைந்து பயணிக்கும் மறைப்பணி திருஅவையாக நாங்கள் திகழ அருள்புரியும்.

உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தந்தையோடும் தூய ஆவியாரோடும் ஒன்றிப்பில், என்றென்றும் புகழும் நன்றியும் உரித்தாகுக.

ஆமென்.

## திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன்.

அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகிறேன். இவர் தூய ஆவியால் கருவாகி, கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.

தூய ஆவியாரை நம்புகிறேன். புனித கத்தோலிக்கத் திருஅவையை, புனிதர்களின் உறவு ஒன்றிப்பை, பாவ மன்னிப்பை, உடலின் உயிர்ப்பை, நிலைவாழ்வை நம்புகிறேன். ஆமென்.

## கர்த்தர் கற்பித்த செபம்

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக. உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை செபம்(3 முறை)

அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசிபெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசிபெற்றவரே.

புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

## தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

# முதலாம் துயர் மறையுண்மை

## ● பச்சை – ஆப்பிரிக்கா

## கெத்சமனித் தோட்டத்தில் இயேசு இரத்த வியர்வை சிந்துதல்

இயேசு அச்சத்தையும், தனிமையையும், மிகுந்த வேதனையையும் தாங்கிக்கொண்ட போதிலும், தந்தையின் திருவுளத்திற்குத் தம்மையே முழுமையாகக் கையளித்தார்.

## ஏழைகளும் ஒதுக்கப்பட்ட நிலையில் வாழ்வோரும்

வறுமை, வன்முறை மற்றும் இடப்பெயர்வால் துன்புறும் ஆப்பிரிக்க மக்களுக்காக, குறிப்பாக அதிகம் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்காகச் செபிப்போம்.



நமது சமூகங்களில் ஏழ்மை, பசி மற்றும் புறக்கணிப்பால் துன்புறும் அனைவருக்காகவும் செபிப்போம். திருஅவையின் அன்பும் அரவணைப்பும் வழியாக, அவர்கள் கிறிஸ்துவின் அன்பையும், மனித மாண்பையும், நம்பிக்கையையும் உணர வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# இரண்டாம் துயர் மறையுண்மை

## ● சிவப்பு – அமெரிக்கக் கண்டங்கள்

## இயேசு தூணில் கட்டப்பட்டு சாட்டையால் அடிக்கப்படுதல்

மனுக்குலத்தின் மீது கொண்ட அன்பினால், இயேசு வேதனையையும் அவமானத்தையும் தாங்கிக்கொண்டார்.

## நோயுற்றோரும் மாற்றுத்திறனாளிகளும்

அமெரிக்கக் கண்டங்களின் மக்கள், கிறிஸ்துவின் இரக்கத்திற்குத் தொடர்ந்து சான்று பகர வேண்டுமென்று அவர்களுக்காகச் செபிப்போம்



நோயுற்றோர், மருத்துவப் பணியாளர்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்காகவும் செபிப்போம். பரிவும் அன்பும் நிறைந்த சமூகங்கள் வழியாக, அவர்கள் நலம்பெற்று, ஏற்றுக்கொள்ளப்பட்டு, கிறிஸ்துவின் அன்பான உடனிருப்பை உணர வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# மூன்றாம் துயர் மறையுண்மை

## ● வெள்ளை – ஐரோப்பா

### இயேசுவுக்கு முள்முடி சூட்டப்படுதல்

இயேசு ஏளனம் செய்யப்பட்டார், புறக்கணிக்கப்பட்டார், இகழப்பட்டார்.

## குணமடைதலும் ஒப்புரவும்

ஐரோப்பாவில் உள்ள திருஅவை, நற்செய்தியின் நம்பிக்கையைத் தொடர்ந்து பறைசாற்ற வேண்டுமென்று செபிப்போம்.



துன்பங்கள், உறவுகளில் ஏற்பட்ட விரிசல்கள், திருஅவையில் ஏற்பட்ட வேதனையான அனுபவங்களால் மனம் புண்பட்டவர்கள் குணமடைந்து, ஒப்புரவு பெற்று, கிறிஸ்துவில் புதுநம்பிக்கை பெற வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# நான்காம் துயர் மறையுண்மை

## ● நீலம் – ஓசியானியா

## இயேசு சிலுவையைச் சுமந்து செல்கிறார்

இயேசு தமது சிலுவையை ஏற்றுக்கொண்டார்; சிரேன் ஊரைச் சேர்ந்த சீமோன் அவருக்குச் சிலுவையைச் சுமக்க உதவினார்.

## மனித மாண்பைப் பாதுகாத்தல்

துன்பங்களையும் தனிமையையும் எதிர்கொள்ளும் ஓசியானிய மக்களுக்காகச் செபிப்போம்.



புலம்பெயர்ந்தோர், அகதிகள், மனிதக் கடத்தலால் பாதிக்கப்பட்டோர், மனித மாண்பு பாதிக்கப்பட்டோர் அனைவரும் இறைமக்களின் பரிவுமிக்க செயல்கள் வழியாகப் பாதுகாப்பையும், நீதியையும், விடுதலையையும் பெற்றிட வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# ஐந்தாம் துயர் மறையுண்மை

## ● மஞ்சள் – ஆசியா

## இயேசு சிலுவையில் அறையப்பட்டு இறக்கிறார்

சிலுவையில் இயேசு தமது மன்னிப்பையும் அன்பையும் வெளிப்படுத்தி, தம் ஆவியைத் தந்தையின் கைகளில் ஒப்படைத்தார்.

## இரக்கமும் துணையிருத்தலும்

தங்கள் நம்பிக்கையின் காரணமாகவும், வாழ்வில் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களாலும் துன்புறும் ஆசிய மக்களுக்காக, குறிப்பாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளவர்களை நினைவில் கொண்டு செபிப்போம்..



தனிமையில் இருப்போர், துயரத்தில் இருப்போர், வாழ்க்கைப் போராட்டங்களை எதிர்கொள்வோர் ஆகியோரை நமது பங்குத்தளங்களும் அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களும் (BECs) இரக்கத்துடன் அரவணைத்து, அவர்களுக்குத் துணைநின்று, கிறிஸ்துவின் குணமளிக்கும் அன்பை உணரச் செய்ய வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# வாழ்க அரசியே! (கிருபை தயாபத்து) செபம்

வாழ்க அரசியே, தயை மிகுந்த அன்னையே,
எங்கள் வாழ்வே, இனிமையே, அடைக்கலமே வாழ்க!
தாயகம் இழந்த ஏவாளின் மக்கள் நாங்கள்,
தாயே என்று உம்மைக் கூவி அழைக்கிறோம்.
கண்ணீரின் பள்ளத்தாக்கிலிருந்து உம்மை நோக்கிக்
கதறி அழுது, பெருமூச்சு விடுகிறோம்.
ஆதலால் எங்களுக்காகப் பரிந்துரைக்கும் தாயே,
அன்புடன் எம்மைக் கடைக்கண் பாரும்.
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவை,
எங்கள் இம்மை வாழ்வின் இறுதியில் காணச் செய்யும்.
கருணையின் உருவே!
தாய்மையின் கனிவே!
இனிய கன்னித் தாயே!

முதல்: **கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படி.**

அனைவரும்: இறைவனின் புனித அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

இறைவா, உமது ஒரே திருமகன் தமது வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் வழியாக எங்களுக்கு நிலையான மீட்பின் பலனைப் பெற்றுத் தந்தார். புனித கன்னி மரியாவின் தூய செபமாலையின் இம்மறையுண்மைகளைத் தியானிக்கும் நாங்கள், அவற்றில் அடங்கியுள்ளவற்றைப் பின்பற்றி வாழவும், அவை வாக்களிப்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக.
**ஆமென்.**

# மறைப்பணி சிந்தனைக்கான கேள்விகள்

கிறிஸ்துவின் பாடுகளைத் தியானிக்கும்போது, நற்செய்தியை அறிவிப்பதே திருஅவையின் பணி என்பதை நினைவுகூருகிறோம். நெருக்கம், பரிவு, கனிவு ஆகியவற்றின் வழியாகவே பல நேரங்களில் நற்செய்தியின் முதல் அறிவிப்பு நிகழ்கிறது. சவாலான சூழ்நிலைகளிலும் இந்தப் பணி தொடர்கிறது. நாம் கிறிஸ்துவைப் பற்றிப் பேசுவதற்கு முன்பே, நமது வாழ்வின் வழியாக மக்கள் கிறிஸ்துவை உணர வேண்டும்.இன்று புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலையை நிறைவு செய்யும் வேளையில், பின்வரும் கேள்விகளின் வழியாக நமது மறைப்பணி வாழ்வைச் சிந்தித்துப் பார்ப்போம்:

❖ஏழைகள், நோயுற்றோர், முதியோர், மாற்றுத்திறனாளிகள், புறக்கணிக்கப்பட்டோர் ஆகியோரில் நான் கிறிஸ்துவைக் காண்கிறேனா?

❖ நமது அடிப்படை கிறிஸ்தவ சமூகத்திலும் (BEC), அக்கம்பக்கத்திலும் கிறிஸ்துவின் பரிவான அன்பை நாம் எவ்வாறு வெளிப்படுத்த முடியும்?

❖அனைவரையும் அன்புடன் வரவேற்று, கிறிஸ்துவின் அன்பையும் இரக்கத்தையும் மக்கள் உணரும் பங்குத்தளமாக நமது பங்கு எவ்வாறு திகழ முடியும்?

❖தேவையில் இருக்கும் புலம்பெயர்ந்த குடும்பங்களை அன்புடன் அணுகி, அவர்களுக்குத் தேவையான உதவியையும் ஆதரவையும் நான் எவ்வாறு வழங்க முடியும்?

❖இளைய தலைமுறையினர் எதிர்கொள்ளும் போராட்டங்களில் அவர்களுக்குத் துணையாக இருந்து, தேவைப்படும் வேளைகளில் பரிவுடன் செவிமடுத்து, அவர்களுடன் இணைந்து பயணிக்க நான் தயாராக இருக்கிறேனா?

# உறுதிமொழி செபம்

ஆண்டவராகிய இயேசுவே,

புதிய நற்செய்திப்பணிக்கான எங்கள் மறைப்பணி செபமாலை சிலுவை அடையாளத்துடன் முடிந்துவிடாமல், பரிவுமிக்க மறைப்பணியின் தொடக்கமாக அமையட்டும். துன்புறுவோரிடம் உமது துணையையும், மனமுடைந்தோரிடம் உமது நம்பிக்கையையும், இன்னும் உம்மைச் சந்தித்து அறியாதோரிடம் உமது அன்பையும் கொண்டு செல்ல எங்களை அனுப்பியருளும்.

பிறரோடு இணைந்து பயணிக்கவும், அவர்களுக்குத் துணையாக இருக்கவும் எங்களுக்கு அருள்தாரும். எங்கள் சொற்களால் மட்டுமன்றி, வாழ்வாலும் நற்செய்திக்குச் சான்று பகரும் மறைப்பணி சீடர்களாக எங்களை உருவாக்கியருளும்.

ஆமென்.

**தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.**

“எனக்குச் சாட்சிகளாய்
இருப்பீர்கள்.”

– திருத்தூதர் பணிகள் 1:8


மகிமையின்
மறையுண்மைகள்
ஞாயிறு மற்றும் புதன்கிழமைகளில்
நம்பிக்கையின் மறைப்பணி
ஒன்றிப்பு • ஒருங்கிணைந்த பயணம் • மறைப்பணி சீடத்துவம்
ஆப்பிரிக்கா
அமெரிக்கக் கண்டங்கள்
ஐரோப்பா
ஓசியானியா
ஆசியா
செபிப்போம் • சான்று பகர்வோம் • நற்செய்தியை அறிவிப்போம்

## தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.

# திருஅவையின் அன்னையும் நற்செய்திப்பணியின் விண்மீனுமாகிய மரியாவை நோக்கி செபம்

இயேசுவின் அன்னையும், அவரது திருஅவையின் அன்னையுமாகிய மரியே,

பெந்தக்கோஸ்தே நாளில் தூய ஆவியார் திருஅவையைத் தோற்றுவித்து, அதனை மறைப்பணிக்காக அனுப்பியபோது, நீர் திருத்தூதர்களோடு உடனிருந்தீர். உமது திருமகனை இன்னும் அறியாத அனைவரிடமும் நற்செய்தியைக் கொண்டு செல்லும் திருஅவையின் மறைப்பணியை வழிநடத்துவதில், உமது தாய்க்குரிய பங்கை நாங்கள் உணர்கின்றோம். காலந்தோறும் மறைப்பணியாளர்கள் தங்கள் பணியின் கனிகளை உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைத்துள்ளனர். இறை அருளின் அன்னையே, உமது பரிந்துரையால் திருமுழுக்கின் அருள் இறைமக்களின் உள்ளங்களில் வேரூன்றி வளர்ந்தது.

இப்போது, குறிப்பாகப் புதிய நற்செய்திப்பணியின் வழியாக, திருஅவையின் நற்செய்திப்பணியை நிறைவேற்ற எங்களுக்கு உதவியருளும். நற்செய்திப்பணியின் விண்மீனே, எங்களையும், எங்கள் குடும்பங்களையும், எங்கள் அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களையும் (BEC), எங்கள் பங்குகளையும், எங்கள் மாமறைமாவட்டத்தையும், எங்களது மறைப்பணி அழைத்தலையும் உமது தாயன்பின் பராமரிப்பில் ஒப்படைக்கின்றோம்.

தூய ஆவியாரின் துணையால், நற்செய்தியை அனைத்து மக்களின் உள்ளங்களிலும் வாழ்விலும் இன்னும் ஆழமாகக் கொண்டு செல்ல எங்களுக்காக வேண்டிக்கொள்ளும். மறைப்பணி சீடர்களை உருவாக்கி, சொல்லாலும் வாழ்வாலும் உமது திருமகனுக்குச் சான்று பகர்ந்து, ஒருங்கிணைந்து பயணிக்கும் மறைப்பணி திருஅவையாக நாங்கள் திகழ அருள்புரியும்.

உமது திருமகனாகிய இயேசு கிறிஸ்துவுக்குத் தந்தையோடும் தூய ஆவியாரோடும் ஒன்றிப்பில், என்றென்றும் புகழும் நன்றியும் உரித்தாகுக.

ஆமென்.

## திருத்தூதர்களின் விசுவாச அறிக்கை

விண்ணகத்தையும் மண்ணகத்தையும் படைத்த எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளை நம்புகிறேன்.

அவருடைய ஒரே மகனாகிய நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை நம்புகிறேன். இவர் தூய ஆவியால் கருவாகி, கன்னி மரியாவிடமிருந்து பிறந்தார். பொந்தியு பிலாத்துவின் அதிகாரத்தில் பாடுபட்டு, சிலுவையில் அறையப்பட்டு, இறந்து, அடக்கம் செய்யப்பட்டார். பாதாளத்தில் இறங்கி, மூன்றாம் நாள் இறந்தோரிடமிருந்து உயிர்த்தெழுந்தார். விண்ணகத்திற்கு எழுந்தருளி, எல்லாம் வல்ல தந்தையாகிய கடவுளின் வலப்பக்கத்தில் வீற்றிருக்கிறார். அங்கிருந்து வாழ்வோருக்கும் இறந்தோருக்கும் தீர்ப்பு வழங்க வருவார்.

தூய ஆவியாரை நம்புகிறேன். புனித கத்தோலிக்கத் திருஅவையை, புனிதர்களின் உறவு ஒன்றிப்பை, பாவ மன்னிப்பை, உடலின் உயிர்ப்பை, நிலைவாழ்வை நம்புகிறேன். ஆமென்.

## கர்த்தர் கற்பித்த செபம்

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக. உமது ஆட்சி வருக. உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறைவேறுக.

எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராகக் குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீமையிலிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

## மங்கள வார்த்தை செபம்(3 முறை)

அருள் நிறைந்த மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசிபெற்றவர் நீரே. உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசிபெற்றவரே.

புனித மரியே, இறைவனின் தாயே, பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும் வேண்டிக்கொள்ளும். ஆமென்.

## தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாகுக.

தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக. ஆமென்.

# முதலாம் மகிமையின் மறையுண்மை

## ● பச்சை – ஆப்பிரிக்கா

## இயேசு உயிர்த்தெழுகிறார்

உயிர்த்த கிறிஸ்துவைச் சந்தித்த அனுபவம் சீடர்களின் வாழ்வையே மாற்றியது. அவர்கள் கிறிஸ்துவுக்குச் சான்று பகரும் சமூகமாக உருவானார்கள்.

### புதுப்பிக்கப்பட்ட மறைப்பணி சமூகங்கள்

உயிர்த்த கிறிஸ்துவின் மகிழ்ச்சியால் வளர்ந்து வரும் ஆப்பிரிக்கத் திருஅவை மேலும் வலுப்பெற, ஆப்பிரிக்க மக்களுக்காகச் செபிப்போம்.



நமது பங்குத்தளங்களும் அடிப்படை கிறிஸ்தவ சமூகங்களும் (BECs), அனைவரையும் அன்புடன் வரவேற்று, சீடர்களை உருவாக்கி, மறைப்பணியில் ஈடுபட அவர்களை ஊக்குவிக்கும் மகிழ்ச்சிநிறைந்த நற்செய்திப்பணி சமூகங்களாக வளர வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# இரண்டாம் மகிமையின் மறையுண்மை

## ● சிவப்பு – அமெரிக்கக் கண்டங்கள்

# இயேசு விண்ணேற்றம் அடைகிறார்

இயேசு விண்ணேற்றம் அடைந்தபோதும், தமது சீடர்களைக் கைவிடவில்லை. மாறாக, தமது மறைப்பணியைத் தொடர்ந்து நிறைவேற்றும் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தார்.

## பொதுநிலையினரின் மறைப்பணி தலைமைத்துவம்

அமெரிக்கக் கண்டங்களின் மக்கள் துணிவுடன் நற்செய்தியைத் தொடர்ந்து அறிவித்து, கிறிஸ்துவுக்குச் சான்று பகர வேண்டுமென்று அவர்களுக்காகச் செபிப்போம்.



பொதுநிலைத் தலைவர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள், தன்னார்வப் பணியாளர்கள் அனைவரும் தாழ்ச்சியுடனும் தாராள உள்ளத்துடனும் மறைப்பணி ஆர்வத்துடனும் பணியாற்றி, பிறரும் கிறிஸ்துவைச் சந்தித்து அறிய வழிகாட்ட வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# மூன்றாம் மகிமையின் மறையுண்மை

## ● வெள்ளை – ஐரோப்பா

## தூய ஆவியாரின் வருகை

பெந்தக்கோஸ்து நாளில் தூய ஆவியார் சீடர்களை ஒன்றிணைத்து, நற்செய்தியைத் துணிவுடன் பறைசாற்ற அவர்களுக்கு வல்லமை அளித்தார்.

## ஒன்றிணைந்து பயணிக்கும் திருஅவை

ஐரோப்பியத் திருஅவை நம்பிக்கையிலும் எதிர்நோக்கிலும் புதுப்பிக்கப்பட வேண்டுமென்று செபிப்போம்.



தூய ஆவியாரின் வழிகாட்டுதலில், அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து மறைப்பணியில் பங்கேற்று, நமது மாமறைமாவட்டம் ஒரே திருஅவைக் குடும்பமாக தொடர்ந்து பயணிக்க வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# நான்காம் மகிமையின் மறையுண்மை

## ● நீலம் – ஓசியானியா

## அன்னை மரியாவின் விண்ணேற்பு

அன்னை மரியா உடலோடும் ஆன்மாவோடும் விண்ணக மகிமைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டார். திருஅவை முழுவதற்கும் அவர் நம்பிக்கையின் அடையாளமாகவும், நாம் அடையவிருக்கும் விண்ணக மகிமையை எடுத்துக்காட்டும் முன்மாதிரியாகவும் திகழ்கிறார்.

## வேற்றுமையில் ஒற்றுமை

ஓசியானிய மக்கள் நம்பிக்கையிலும் ஒற்றுமையிலும் தொடர்ந்து வளர வேண்டுமென்று அவர்களுக்காகச் செபிப்போம்.



பல இனங்கள், மொழிகள், பண்பாடுகளைச் சேர்ந்த அனைவரையும் கிறிஸ்துவில் ஒரே குடும்பமாக அன்புடன் அரவணைத்து, நற்செய்தியால் ஒன்றிணைக்கப்பட்ட திருஅவையாக நாம் வாழ்ந்து சான்று பகர வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே...

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி...

ஓ என் இயேசுவே...

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# ஐந்தாம் மகிமையின் மறையுண்மை

## ● மஞ்சள் – ஆசியா

### அன்னை மரியா விண்ணக அரசியாக முடிசூட்டப்படுகிறார்

அன்னை மரியாவின் வாழ்வு முழுவதும் இறைவனின் அழைப்புக்கான பதிலாக அமைந்தது. மங்கள வார்த்தையின் போது அவர் கூறிய “ஆம்” என்ற பதில், வாழ்நாள் முழுவதும் தொடர்ந்த மறைப்பணி அர்ப்பணிப்பாக மலர்ந்தது.

## மறைப்பணிக்கான அழைத்தல்கள்

ஆசிய மக்கள் துணிவுடனும் நம்பிக்கையுடனும் நற்செய்தியைத் தொடர்ந்து அறிவிக்க வேண்டுமென்று செபிப்போம்.



குருத்துவம், துறவறம், பொதுநிலை மறைப்பணி ஆகிய அழைத்தல்களை ஏற்று, கிறிஸ்துவின் அழைப்புக்குத் தாராள மனதுடன் பதிலளிக்கப் பலர் முன்வரவும், திருஅவைக்குப் பணிபுரிந்து நமது மாமறைமாவட்டத்திலும், ஆசியா முழுவதிலும், உலகின் கடையெல்லைவரையிலும் நற்செய்தியை அறிவிக்கவும் வேண்டுமென்று செபிப்போம்.

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே…

அருள் நிறைந்த மரியே வாழ்க (10 முறை)

தந்தைக்கும் மகனுக்கும் தூய ஆவியாருக்கும் மாட்சி…

ஓ என் இயேசுவே…

வாழ்க, வாழ்க, வாழ்க மரியே (2x)

# வாழ்க அரசியே! (கிருபை தயாபத்து) செபம்

வாழ்க அரசியே, தயை மிகுந்த அன்னையே,
எங்கள் வாழ்வே, இனிமையே, அடைக்கலமே வாழ்க!
தாயகம் இழந்த ஏவாளின் மக்கள் நாங்கள்,
தாயே என்று உம்மைக் கூவி அழைக்கிறோம்.
கண்ணீரின் பள்ளத்தாக்கிலிருந்து உம்மை நோக்கிக்
கதறி அழுது, பெருமூச்சு விடுகிறோம்.
ஆதலால் எங்களுக்காகப் பரிந்துரைக்கும் தாயே,
அன்புடன் எம்மைக் கடைக்கண் பாரும்.
உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவை,
எங்கள் இம்மை வாழ்வின் இறுதியில் காணச் செய்யும்.
கருணையின் உருவே!
தாய்மையின் கனிவே!
இனிய கன்னித் தாயே!

முதல்: **கிறிஸ்துவின் வாக்குறுதிகளுக்கு நாங்கள் தகுதி பெறும்படி.**

அனைவரும்: இறைவனின் புனித அன்னையே, எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்.

## செபிப்போமாக

இறைவா, உமது ஒரே திருமகன் தமது வாழ்வு, இறப்பு, உயிர்ப்பு ஆகியவற்றின் வழியாக எங்களுக்கு நிலையான மீட்பின் பலனைப் பெற்றுத் தந்தார். புனித கன்னி மரியாவின் தூய செபமாலையின் இம்மறையுண்மைகளைத் தியானிக்கும் நாங்கள், அவற்றில் அடங்கியுள்ளவற்றைப் பின்பற்றி வாழவும், அவை வாக்களிப்பவற்றைப் பெற்றுக்கொள்ளவும் எங்களுக்கு அருள்புரிய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

எங்கள் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் வழியாக.
**ஆமென்.**

# மறைப்பணி சிந்தனைக்கான கேள்விகள்

உயிர்த்த கிறிஸ்துவைத் தியானிக்கும்போது, அனைவரும் நம்பிக்கையைக் கண்டடையும் சமூகங்களாக வளர நாம் அழைக்கப்படுகிறோம். அங்கு ஒவ்வொருவருக்கும் இடமுண்டு; ஒவ்வொருவரின் கொடைகளும் அறிந்து மதிக்கப்படுகின்றன; நம்மிடையே உள்ள வேறுபாடுகள் நம்மை வளப்படுத்துகின்றன; திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவரும் தமது மறைப்பணி அழைத்தலை உணர்ந்து வாழ்கின்றனர். இன்று புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலையை நிறைவு செய்யும் வேளையில், பின்வரும் கேள்விகளின் வழியாக நமது மறைப்பணி வாழ்வைச் சிந்தித்துப் பார்ப்போம்:

❖திருமுழுக்குப் பெற்ற நான், மறைப்பணி சீடர் என்ற என் அடையாளத்தை உணர்ந்து ஏற்றுக்கொள்கிறேனா?

❖அனைவரும் ஒற்றுமையுடன் இணைந்து மறைப்பணியில் பங்கேற்று, ஒன்றாகப் பயணிக்கும் பங்குச் சமூகத்தை உருவாக்க நான் எவ்வாறு பங்களிக்க முடியும்?

❖இறைவன் எனக்கு அளித்துள்ள கொடைகளை மலேசியத் திருஅவையின் மறைப்பணிக்காக நான் எவ்வாறு பயன்படுத்த முடியும்?

❖ஆன்மீக இரக்கச் செயல்கள் மூலம் மீட்பின் நற்செய்தியை நான் யாரிடம் கொண்டு செல்ல முடியும்?

❖இன்னும் கிறிஸ்துவை அறியாதவர்களைத் தேடிச் சென்று சந்தித்து, அவர்களுக்கு கிறிஸ்துவின் நம்பிக்கையைக் கொண்டு செல்லும் திருஅவையாக நமது பங்கு வளர நான் எவ்வாறு பங்களிக்க முடியும்?

# உறுதிமொழி செபம்

ஆண்டவராகிய இயேசுவே, உயிர்த்த கிறிஸ்துவே,

புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலை, உமது மறைப்பணி சீடர்களாக வாழ எங்களை வலுப்படுத்துவதாக.

ஒன்றிப்பில் வளரவும், நீர் எங்களுக்கு அளித்த கொடைகளைத் திருஅவையின் மறைப்பணிக்காகப் பயன்படுத்தவும் எங்களுக்கு அருள்தாரும். அனைவரையும் தேடிச் சென்று, உமது நம்பிக்கையையும் அன்பையும் துணையையும் அவர்களிடம் கொண்டு செல்லும் திருஅவையாக வாழ எங்களை வழிநடத்தும். குறிப்பாக, இன்னும் உம்மைச் சந்தித்து அறியாதவர்களை நாங்கள் சென்றடையச் செய்தருளும்.

புதிய நற்செய்திப்பணியில் நற்செய்தியின் மகிழ்ச்சியைப் பறைசாற்ற, உமது தூய ஆவியார் எங்களை வழிநடத்தி, அதற்கான வல்லமையை அளிப்பாராக.

ஆமென்.

**தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே. ஆமென்.**

# நிறைவுச் செய்தி

## திருஅவை ஆன்மீக ஆலோசகர்களிடமிருந்து

செபத்தோடு சிறிது நேரம் சிந்தித்துப் பார்ப்போம்:

"அடுத்து என்ன செய்ய ஆண்டவர் என்னை அழைக்கிறார்?"

புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலை, நம்மை மட்டும் மையப்படுத்தாமல், திருஅவையின் உலகளாவிய மறைப்பணியில் பங்குபெற நம்மை அழைக்கிறது. நமது சூழலுக்கேற்ப அமைக்கப்பட்டுள்ள மன்றாட்டுகள் வழியாக, இந்த மறைப்பணி திருமுழுக்குப் பெற்ற ஒவ்வொருவருக்கும் உரியது என்பதை நினைவுகூருகிறோம். நமது நம்பிக்கைப் பயணத்தில் நாம் எங்கு இருந்தாலும், ஒற்றுமை, பங்கேற்பு, மறைப்பணி ஆகியவற்றில் ஒன்றிணைந்து பயணிக்கும் திருஅவையாக வாழ நாம் அழைக்கப்படுகிறோம்.

கிறிஸ்துவுக்கான புதிய நற்செய்திப்பணியின் மாமறைமாவட்ட மறைப்பணி (AMNEC), இயேசுவை அறிந்து, அவரை அன்பு செய்து, அவரைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளும் சீடத்துவப் பாதையில் நம்மை வழிநடத்துகிறது. அதன் பல்வேறு முயற்சிகள் மற்றும் உருவாக்கப் பயிற்சிகள் வழியாக, கிறிஸ்துவை இன்னும் ஆழமாகச் சந்திக்கவும், அவருடனான நட்புறவில் வளரவும், நற்செய்தியின் மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் நாம் அழைக்கப்படுகிறோம்.

நமது மறைக்கல்வி மாணவர்களும் இளம் மறைப்பணி சீடர்களாக வளர முடியும். PMS–Holy Childhood செயல்பாடுகளில் பங்கேற்பதன் வழியாக, உலகெங்கிலும் உள்ள சிறார்களுக்காகச் செபிக்கவும், தேவையில் இருப்போருடன் தாராள மனதுடன் பகிர்ந்துகொள்ளவும் கற்றுக்கொண்டு, மறைப்பணி அன்பின் மகிழ்ச்சியை அனுபவிக்கிறார்கள்.

இவை மறைப்பணி வாழ்வில் நாம் பங்கேற்கக்கூடிய சில வழிகள் மட்டுமே. நமது குடும்பங்கள், அடிப்படை கிறிஸ்தவ சமூகங்கள் (BECs), பங்குத்தளங்கள், பணியிடங்கள், உறவுகள், நாம் ஆற்றும் பணிகள் மற்றும் நமது வாழ்க்கை முறை ஆகியவற்றின் வழியாக, திருமுழுக்கில் நாம் பெற்ற மறைப்பணி அழைப்பை எவ்வாறு வாழ ஆண்டவர் நம்மை அழைக்கிறார் என்பதை ஒவ்வொருவரும் கண்டுணர அழைக்கப்படுகிறோம். சிலருக்கு இந்த அழைப்பு, குருத்துவம் அல்லது துறவற வாழ்வுக்கான அழைத்தலாகவும் அமையலாம்; அதன் வழியாக அவர்கள் கிறிஸ்துவுக்கும் அவரது திருஅவைக்கும் பணிபுரியத் தங்கள் வாழ்வை இன்னும் முழுமையாக அர்ப்பணிக்கின்றனர்.

புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலை, பிறர்மீது அக்கறை கொள்ளவும், கிறிஸ்துவைத் தேடவும், நற்செய்தியின் மகிழ்ச்சியைப் பிறருடன் பகிர்ந்துகொள்ளவும் தூண்டும் மறைப்பணி உள்ளத்தை நம்மில் வளர்ப்பதாக.

அவருடைய தாய் பணியாளர்களிடம், “அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்” என்றார். (யோவான் 2:5)

**அருள்பணி ரேமண்ட் பெரேரா**
**திருஅவை ஆன்மீக ஆலோசகர்**
**திருத்தந்தையின் மறைப்பணி கழகங்கள்**
**கோலாலம்பூர் மாமறைமாவட்டம்**

**அருள்பணி எட்வின் பீட்டர்**
**திருஅவை ஆன்மீக ஆலோசகர்**
**கிறிஸ்துவுக்கான புதிய நற்செய்திப்பணியின்**
**மாமறைமாவட்ட மறைப்பணி (AMNEC)**

# நன்றியுரை

- புதிய நற்செய்திப்பணிக்கான இந்த மறைப்பணி செபமாலை மின் கையேட்டைத் தயாரிக்கும் பணி முழுவதும், தமது அருளால் எங்களைத் தூண்டி வழிநடத்திய எல்லாம் வல்ல இறைவனுக்கு நன்றி செலுத்துகிறோம்.

- தமது ஆசீரையும் ஆதரவையும் வழங்கிய பேரருள்திரு ஜூலியன் லியோ அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

- நமது மாமறைமாவட்டத்தில் புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலையை ஊக்குவித்து, இதன் தயாரிப்புப் பணி முழுவதும் ஆன்மீக வழிகாட்டுதலையும், ஊக்கத்தையும், ஆதரவையும் வழங்கிய கோலாலம்பூர் மாமறைமாவட்ட திருத்தந்தையின் மறைப்பணி கழகங்கள் (PMS) மற்றும் கிறிஸ்துவுக்கான புதிய நற்செய்திப்பணியின் மாமறைமாவட்ட மறைப்பணி (AMNEC) ஆகியவற்றின் திருஅவை ஆன்மீக ஆலோசகர்களுக்கு எங்கள் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். மேலும், இந்த மின் கையேட்டை நீலாய் புனித தெரேசா ஆலயத்தில் வெளியிட அன்புடன் அனுமதி வழங்கிய அருள்பணி கிறிஸ்டோபர் சூசைப்பிள்ளை அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி.

❖ இந்த மின் கையேட்டைத் தயாரிக்கத் தங்கள் நேரம், செபம், சிந்தனைகள், மெய்ப்புப் பார்வை, வடிவமைப்பு மற்றும் பிற பணிகள் வழியாகத் தாராளமாகப் பங்களித்த புதிய நற்செய்திப்பணிக்கான மறைப்பணி செபமாலை குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. மேலும், குடும்பங்கள், அடிப்படை கிறிஸ்தவ சமூகங்கள் (BECs), பங்குச் சமூகங்கள் ஆகியவற்றின் பயன்பாட்டிற்காக இந்த மின் கையேட்டை ஆய்வு செய்யவும், மொழிபெயர்க்கவும், தயாரிக்கவும் உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறோம்.

❖ 1951ஆம் ஆண்டு வணக்கத்திற்குரிய பேராயர் ஃபுல்டன் ஜே. ஷீன் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட பாரம்பரிய உலக மறைப்பணி செபமாலை (World Mission Rosary) நமக்கு அளித்த தூண்டுதலை நன்றியுடன் நினைவுகூருகிறோம். உலகின் அனைத்துக் கண்டங்களையும் மக்களையும் செபத்தில் அரவணைக்க இந்தச் செபமாலை இறைமக்களை ஊக்குவிக்கிறது.

❖ விளக்கப்படங்கள்: செயற்கை நுண்ணறிவு (AI) மூலம் உருவாக்கப்பட்டவை.




# மறைப்பணி

திருஅவை நற்செய்தியை அறிவிப்பதற்காகவே இருக்கிறது.
கிறிஸ்துவின் அன்பால் தூண்டடப்ப்ட்டு,
அனைத்து மக்களுக்கும் நற்செய்தியைக் கொண்டு செல்லவும்,
நம்பிக்கை, எதிர்நோக்கு, அன்பு ஆகியவற்றில்
ஒருவரோடு ஒருவர் இணைந்து பயணிக்கவும்
நாம் அழைக்கப்படுகிறோம்.

# செபம்

புதிய நற்செய்திப்பணியின் விண்மீனாகிய மரியாவின் வழியாக,
திருஅவை முழுவதோடும் ஒன்றிணைந்து,
நற்செய்திப்பணிக்காக நமது செபங்களை
அர்ப்பணிக்கிறோம்.

# சான்று பகர்தல்

தூய ஆவியாரால் வலுப்பெற்று,
கிறிஸ்துவின் அன்புக்கு மகிழ்ச்சியுடன் சான்று பகர்ந்து,
நமது உலகிற்கு நம்பிக்கையைக் கொண்டு செல்ல
நாம் புறப்பட்டுச் செல்கிறோம்.

# நற்செய்தியை அறிவித்தல்

நாம் தனியாகச் செல்வதில்லை;
ஒரே திருஅவையாக ஒன்றிணைந்து செல்கிறோம்.
சீடர்க்ளை உருவாக்கவும்,
நற்செய்தியால் நமது உலகை மாற்றவும்
நாம் அனுப்பப்படுகிறோம்.

Go

கிறிஸ்துவுக்கான புதிய
நற்செய்திப்பணியின் மாமறைமாவட்ட
மறைப்பணி (AMNEC)

திருத்தந்தையின் மறைப்பணி கழகங்கள் (PMS)
கோலாலம்பூர் மாமறைமாவட்டம்